சுருக்கம்

கல்லூரிக் கல்வி – சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரி – விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், மேட்டமலை அஞ்சல் என்னுமிடத்தில் "ஸ்ரீகிருஷ்ணசாமி கலை மற்றும் அறிவியல் (இருபாலர்) கல்லூரி" என்கிற பெயரில் புதிய நிதியுதவி பெறாத தனியார் சுயநிதி கல்லூரியை 2014–15–ஆம் கல்வியாண்டு முதல் துவங்க அனுமதியளித்தல் – ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

உயர் கல்வித் (இ1) துறை

அரசாணை (நிலை) எண். 84

நாள்:23.6.2014.
ஜய, ஆனி 9,
திருவள்ளுவராண்டு 2045,
படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.356, உயர் கல்வித் (இ1) துறை, நாள்: 29.9.2009.
2. அரசாணை (நிலை) எண்.4, உயர்கல்வித் (இ1) துறை, நாள்.7.1.2011.
3. அரசுக் கடிதம் எண்.17861/இ1/11–1, உயர்கல்வி (இ1) துறை, நாள்.16.9.2011.
4. விருதுநகர் மாவட்ட வருவாய் அலுவலரின் கடிதம் ந.க.எண். ஜெ 1/ 50636/2013, நாள். 3–1–2014.
5. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க. எண்.54801/ஆர் 2/ 2013, நாள். 25.2.2014 மற்றும் 22.5.2014.

* * * *   * * *   * * * *

ஆணை :–

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், மேட்டமலை அஞ்சல் என்னுமிடத்தில், 2014–15–ஆம் கல்வியாண்டு முதல் ஸ்ரீகிருஷ்ணசாமி கலை மற்றும் அறிவியல் (இருபாலர்) கல்லூரி என்கிற பெயரில் புதிய நிதியுதவி பெறாத தனியார் சுயநிதி கல்லூரியினை தொடங்க ஸ்ரீகிருஷ்ணசாமி கல்வி மற்றும் சேவை அறக்கட்டளை சார்பில் விண்ணப்பம் பெறப்பட்டு, விருதுநகர் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் மதுரை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் ஆகியோரின் ஆய்வறிக்கைகள் பெறப்பட்டது எனவும், இக்கல்வி முகமை பின்வருவனவற்றை நிறைவு செய்துள்ளதாகவும், மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட கடிதங்களில் கல்லூரிக் கல்வி இயக்குநர் அரசுக்குத் தெரிவித்துள்ளார்:–

i) கல்லூரிக் கல்வி இயக்குநர் மற்றும் கல்வி முகமையின் பெயரில் கூட்டாக ரூ.20,00,000/– (ரூபாய் இருபது லட்சம்) வைப்புத்தொகை தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் உள்கட்டமைப்பு வளர்ச்சி நிறுவனத்தில் (இரசீது எண். RAA 247949, நாள் 17.2.2014) முதலீடு செய்யப்பட்டுள்ளது.

ii) விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், மேட்டமலை என்னுமிடத்தில் **11.35** ஏக்கர் நிலம் "ஸ்ரீகிருஷ்ணசாமி கலை மற்றும் அறிவியல் (இருபாலர்) கல்லூரிக்காக தானமாக வழங்கப்பட்டுள்ளது. நில உரிமை குறித்து அரசு கூடுதல் வழக்கறிஞரின் சட்டக் கருத்தும் பெறப்பட்டுள்ளது.

iii) மேற்கண்ட 11.35 ஏக்கர் நிலம் தொடர்ச்சியாக உள்ளது என கிராம நிர்வாக அலுவலர் சான்று அளித்துள்ளார். நில உபயோக சான்றிதழை மாவட்ட வருவாய் அலுவலர் அளித்துள்ளார்.

iv) துவங்கப்பட உள்ள இக்கல்லூரி அமையவுள்ள 20 கி.மீ. சுற்றளவில் 50–க்கும் மேற்பட்ட மேல் நிலைப்பள்ளிகளும் 2 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் உள்ளன.

v) சுயநிதி கல்லூரிகள் தொடங்கி நடத்துவது தொடர்பாக அரசாணைகளில் விதித்துள்ள அனைத்து நிபந்தனைகளையும் நிறைவேற்றுவதாக கல்வி முகமை ரூ.20-க்கான முத்திரைத்தாளில் ஒப்பந்த பத்திரம் அளித்துள்ளது.

vi) இக்கல்லூரிக்கென கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் கல்லூரி நடத்தப் போதுமான உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அனைத்து அடிப்படை வசதிகளும் உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான நிலைத்தன்மை சான்று பொதுப்பணித்துறை கண்காணிப்புப் பொறியாளரிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

vii) கல்லூரி கட்டிடத்திற்கான வரைபட அனுமதி நகர் ஊரமைப்பு துணை இயக்குநரிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

2. மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், கல்லூரிக் கல்வி இயக்குநரால் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்ட, ஸ்ரீகிருஷ்ணசாமி கல்வி மற்றும் சேவை அறக்கட்டளை சார்பில், விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், மேட்டமலை அஞ்சல் என்னுமிடத்தில், "ஸ்ரீகிருஷ்ணசாமி கலை மற்றும் அறிவியல் (இருபாலர்) கல்லூரி" என்ற பெயரில், புதிய நிதியுதவி பெறாத தனியார் சுயநிதி கல்லூரியினை துவங்க அனுமதி வேண்டுகின்ற கருத்துரு மேலே ஒன்று, இரண்டு, மூன்று, மற்றும் நான்காவதாக படிக்கப்பட்ட அரசாணைகள், கடிதம் மற்றும் விருதுநகர் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் ஆய்வறிக்கை ஆகியவைகளின்படி, அரசால் விரிவாக ஆய்வு செய்யப்பட்டது. அதனடிப்படையில், Local Body approval for Building Plan and Certificate under section 37(B) of Tamil Nadu Land Reforms (Land fixation and ceiling) Act, 1961மற்றும் பிற சான்றிதழ்களும் சார்ந்த துறைகளிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

3. மேற்கண்ட நிலையில், விருதுநகர் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் கல்லூரிக் கல்வி இயக்குநர் ஆகியோரின் பரிந்துரைகளின் அடிப்படையில், ஸ்ரீகிருஷ்ணசாமி கல்வி மற்றும் சேவை அறக்கட்டளை சார்பில், **2014-15ஆம் கல்வியாண்டு முதல்** ஸ்ரீகிருஷ்ணசாமி கலை மற்றும் அறிவியல் (இருபாலர்) கல்லூரி என்ற பெயரில், புதிய நிதியுதவி பெறாத தனியார் சுயநிதி கல்லூரியினை, விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், மேட்டமலை அஞ்சல் என்னுமிடத்தில், சர்வே எண். **483/ 2B, 487/1, 488/2, 489/2, 490/2B, 492** மற்றும் **494/5** ஆகியவற்றில் உள்ள **11.35** ஏக்கர் நிலத்தில் கட்டப்பட்டுள்ள நிரந்தரக் கட்டிடத்தில் (RCC கட்டிடம்), ஓராண்டுக்கு (முதலாமாண்டுக்கு) B.A. English, B.Com., B.Sc. (Maths with Computer Applications) B.Sc., (Computer Science), and B.Com., (C.A) ஆகிய பாடப்பிரிவுகளுடன் துவங்குவதற்கு, Land Conversion Certificate from Directorate of Town Country Planning மற்றும் Tamil Nadu Pollution Control Board Certificate ஆகிய சான்றுகளை சார்ந்த கல்லூரி முகமையானது மூன்று மாத காலத்திற்குள் பெற்று அரசுக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்கின்ற நிபந்தனைக்குட்பட்டு அனுமதி வழங்கலாம் என முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

4. மேற்கண்ட அனுமதி, கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டது எனவும் அரசு ஆணையிடுகிறது:-

(1) கல்லூரியின் நிரந்தர இடத்தில் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளதற்கான உரிய சான்றிதழுடன் சார்ந்த கல்வி முகமை, சார்ந்த பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

(2) அனைத்துப் பாடப்பிரிவுகளும் தொடங்குவதற்கு முன்பே சார்ந்த பல்கலைக்கழகத்தின் இணைவு பெறுதல் வேண்டும்.

(3) மேலே பத்தி 3-இல் தெரிவிக்கப்பட்டுள்ள இடம் கல்லூரி பயன்பாட்டிற்காக மட்டும் பயன்படுத்தப்படவேண்டும்.

(4) அரசு எவ்விதமான நிதியுதவியையும் எத்தருணத்திலும் சுயநிதி அடிப்படையில் செயல்படும் இக்கல்லூரிக்கு வழங்காது.

(5) சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்குவது தொடர்பான அரசாணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை இக்கல்வி முகமை முழுமையாக நிறைவு செய்ய வேண்டும்.

(6) அரசு / பல்கலைக்கழகம் அனுமதித்துள்ள பாடப்பிரிவுகளை தவிர வேறு எந்த பாடப்பிரிவுகளையும் இக்கல்வி முகமை கல்லூரியில் தொடங்கக் கூடாது.

(7) பல்கலைக்கழக நிதிநல்கைக்குழு / பல்கலைக்கழகம் / அரசு நிர்ணயித்துள்ள அளவுகோல் மற்றும் கல்வித்தகுதிகளின் அடிப்படையில் மட்டுமே இக்கல்லூரியின் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

(8) இக்கல்விமுகமை, அரசு அவ்வப்போது நிர்ணயம் செய்யும் ஏற்புடைய கட்டணங்களைத் தவிர முதலீட்டாளர் கட்டணம் அல்லது நன்கொடை ஆகியவற்றை எவ்வித்த்திலும் பெறக்கூடாது.

(9) அரசு/கல்லூரிக் கல்வி இயக்குநரால் நிர்ணயம் செய்யப்பட்ட படிப்புக்கட்டணம், சிறப்புக்கட்டணம், விண்ணப்பக்கட்டணம், பதிவுக்கட்டணம், ஆய்வுக் கட்டணம் மற்றும் காப்புறுதிக்கட்டணம் ஆகியவற்றை மட்டுமே இக்கல்லூரி மாணாக்கரிடம் வசூலிக்கவேண்டும்.

(10) அரசு/கல்லூரிக் கல்வி இயக்குநர் அவ்வப்போது அறிவிக்கும் மாணவர் சேர்க்கைக்கான நெறிமுறைகளைக் இக்கல்விமுகமை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும். மேலும் அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையைக் கடைப்பிடித்து, 50 விழுக்காடு இடங்கள் மற்றும் சார்ந்த பல்கலைக்கழகத்திடமிருந்து பெறப்படும் அனைத்து கூடுதல் இடங்களையும் நிரப்ப வேண்டும்.

(11) கல்விமுகமை, இக்கல்லூரியை நிர்வகிக்க முடியாமல் போகும் நிலையில், அதனை அரசு ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முன்வராது.

(12) தீயணைப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளதற்கான சான்றிதழ் மற்றும் மின் இணைப்பு தரச்சான்றிதழ் ஆகியவை பெறப்பட வேண்டும். மேலும், மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்கப்பட வேண்டும்.

(13) மாற்றுத் திறனாளிகளுக்கு ஏற்ற வகையில் சாய்தள வசதி (Ramp) செய்யப்படவேண்டும்.

(14) அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள இதர நிபந்தனைகளை பூர்த்தி செய்த பின்னர், ஆய்வு மேற்கொண்டு உரிய நிரந்தரக் கட்டிடத்தில் அனைத்து வசதிகளுடன் சிறந்த முறையில் செயல்பட்டு வந்தால் மட்டுமே இக்கல்லூரி தொடர்ந்து செயல்பட அனுமதிக்கப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஹேமந்த் குமார் சின்ஹா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை-6.
மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர், மதுரை.
மாவட்ட வருவாய் அலுவலர், விருதுநகர் மாவட்டம், விருதுநகர்.
பதிவாளர், மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை.
செயலர் / தலைவர், ஸ்ரீகிருஷ்ணசாமி கல்வி மற்றும் சேவை அறக்கட்டளை,
மேட்டமலை (அஞ்சல்), சாத்தூர் – 626 203, விருதுநகர் மாவட்டம்.
நகல்: மாண்புமிகு உயர் கல்வித்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், உயர் கல்வித்துறை, சென்னை -9.
இ.கோ / உ.திரி.,

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது//

23.6.14
பிரிவு அலுவலர்